பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

13 05 2024 **MONDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மக்களவை தேர்தல் நான்காம் கட்ட வாக்குப்பதிவில் 62 புள்ளி ஐந்து ஆறு சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
2. தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் இந்தியாவின் பொருளாதாரம் வளர்ச்சி கண்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
3. காங்கிரஸ் கூட்டணி ஆட்சிப் பொறுப்பேற்றால், ஏழை விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்வதே தங்களது முதல் பணியாக இருக்கும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.
4. ஈரான் நாட்டில் உள்ள **Chabahar** துறைமுகத்தை இந்தியா பயன்படுத்தும் வகையில், இருநாடுகளுக்கு இடையேயான நீண்ட கால ஒப்பந்தம் இன்று கையெழுத்தானது..
5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், குஜராத் இன்று கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

**>>>><<<<**

மக்களவைத் தேர்தல் நான்காம் கட்ட வாக்குப்பதிவில் 62 புள்ளி ஐந்து ஆறு சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையத்தின் முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆந்திராவில் 25, தெலங்கானாவில் 17, உத்தரபிரதேசத்தில் 13, மகாராஷ்ட்ராவில் 11, மத்தியப்பிரதேசம் மற்றும் மேற்குவங்கத்தில் தலா 8, பீகாரில் 5, ஜார்க்கண்ட் மற்றும் ஒடிசாவில் தலா 4, ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் ஒரு தொகுதி என 96 தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு நடைபெற்றது.

ஒரு லட்சத்து 92 ஆயிரம் வாக்குச்சாவடிகளில் 19 லட்சத்திற்கும் மேற்பட்ட தேர்தல் அதிகாரிகள் தேர்தல் பணியில் ஈடுபட்டனர்.

ஆந்திரப்பிரதேசத்தில் 68 புள்ளி பூஜ்யம் ஆறு சதவீத வாக்குகளும்,

தெலங்கானாவில் 61 புள்ளி ஒன்று ஆறு சதவீத வாக்குகளும்,

உத்தரபிரதேசத்தில் 57 புள்ளி ஒன்று ஆறு சதவீத வாக்குகளும்,

மகாராஷ்ட்ட்ராவில் 52 புள்ளி ஆறு மூன்று சதவீத வாக்குகளும்,,

மத்தியப்பிரதேசத்தில் 68 புள்ளி இரண்டு ஐந்து சதவீத வாக்குகளும்,

மேற்குவங்கத்தில் 75 புள்ளி ஏழு இரண்டு சதவீத வாக்குகளும்,

பீகாரில் 55 புள்ளி ஆறு இரண்டு சதவீத வாக்குகளும்,

ஜார்க்கண்ட்டில் 63 புள்ளி ஒன்று ஒன்பது சதவீத வாக்குகளும்,

ஒடிசாவில் 63 புள்ளி எட்டு ஐந்து சதவீத வாக்குகளும் மற்றும்

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் 35 புள்ளி ஒன்பது ஏழு சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

ஆந்திரப்பிரதேசத்தில் 175 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நடைபெற்ற வாக்குப்பதிவில் 68 புள்ளி பூஜ்யம் ஒன்று சதவீத வாக்குகள் பதிவாகின.

ஒடிசாவில் 28 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நடைபெற்ற முதல்கட்டமாக வாக்குப்பதிவில் 63 புள்ளி எட்டு ஐந்து சதவீத வாக்குகள் பதிவாகின.

தெலங்கானா மாநிலம், செகந்திராபாத் கண்டோன்மென்ட் சட்டப்பேரவை தொகுதிக்கான இடைத்தேர்தலில் 47 புள்ளி எட்டு எட்டு சதவீத வாக்குகள் பதிவாகின.

உத்தரபிரதேசத்தின் **Dadraul** தொகுதி இடைத்தேர்தலில் 58 புள்ளி நான்கு எட்டு சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மேற்குவங்கத்தின் **Birbhum** மக்களவை தொகுதிக்கு உட்பட்ட 25வது வாக்குச்சாவடியில் பணியாற்றிய தேர்தல் அதிகாரியை, தேர்தல் ஆணையம் இன்று நீக்கியது.

அந்த வாக்குச்சாவடியில் ஒரு நபர் வாக்காளர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டதாகவும், இணையவழி ஒலிபரப்பில் அதனைக் கண்டறிந்த தேர்தல் குழுவினர் அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு அந்த அதிகாரியிடம் வலியுறுத்தியதாகவும், அதனை அவர் பின்பற்றாத

காரணத்தால் அவர் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

மக்களவைக்கு எஞ்சியுள்ள 3 கட்ட தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிரமாக பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, வாரணாசியில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் இன்று பங்கேற்றுப் பேசினார்.

மேலும், அங்குள்ள பண்டிட் மதன்மோகன் மாளவியாவின் சிலைக்கு அவர் மரியாதை செலுத்தினார்.

முன்னதாக, பீகாரின் **Hajipur, Muzaffarpur**–ல் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டங்களில் திரு. நரேந்திர மோடி பங்கேற்றுப் பேசினார்.

தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் இந்தியாவின் பொருளாதாரம் வளர்ச்சி கண்டுள்ளதாக அவர் கூறினார்.

மேலும், பல்வேறு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ராஷ்ட்ரீய ஜனதா தளம் மற்றும் காங்கிரஸ் கட்சிகள் சந்தர்ப்பவாத அரசியலை மேற்கொண்டு வருவதாக திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டினார்.

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, ஜார்கண்ட் மாநிலம், **Hazaribagh**–ல் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது, பிஜேபி மீண்டும் மத்தியில் ஆட்சியமைக்க முடியாது என்று அவர் தெரிவித்தார்.

நாட்டின் அரசியலமைப்பை மாற்றுவதே அக்கட்சியின் மறைமுக கொள்கையாக உள்ளது என்று திரு. மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டினார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி, உத்தரபிரதேச மாநிலம் ரேபரேலியில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினார்.

காங்கிரஸ் கூட்டணி ஆட்சிப் பொறுப்பேற்றால், ஏழை விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்வதே தங்களது முதல் பணியாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

பிஜேபி மூத்த தலைவர் திரு. அமித் ஷா இன்று மஹாராஷ்ட்ரா மாநிலம், **Palghar** மாவட்டத்தில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் பங்கேற்றார்.

பழங்குடியினர் நலனுக்காக பிஜேபி அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த காலத்தில் காங்கிரஸ் ஆட்சியின் போது, இந்தியாவின் பொருளாதாரம் உலக அளவில் 11வது இடத்தில் இருந்தது என்றும், தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் அது 5வது இடமாக அமைந்தது என்றும் திரு. அமித் ஷா கூறினார்.

>>>><<<<

குடியரசு துணைத்தலைவர் ஜெக்தீப் தங்கர் மாநிலங்களவை பயிற்சி திட்டத்தில் பங்கேற்ற மாணவர்களோடு கலந்துரையாடினார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று நடைபெற்ற இந்த கலந்துரையாடலின் போது, அரசியலமைப்பை செயல்படுத்துவதில், நாடாளுமன்றத்தின் பங்கு குறித்து மாணவர்கள் நன்கு அறிந்து கொள்ளவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இந்திய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்தும், நாட்டின் வரலாற்றுச் சாதனைகள் குறித்தும், மாணவர்கள் பெருமிதப்படவேண்டும் என்று திரு. ஜெக்தீப் தங்கர் தெரிவித்தார்.

>>>><<<<

சிபிஎஸ்ஈ 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன.

87 புள்ளி ஒன்பது எட்டு சதவீதம் பேர் இந்த தேர்வில் தேர்ச்சி அடைந்துள்ளனர்.

24 ஆயிரம் மாணவர்கள் 95 சதவீதத்திற்கும் அதிகமான மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 93 புள்ளி ஆறு சதவீத மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

சிபிஎஸ்ஈ பொதுத்தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மாணவர்கள் தங்களது கல்விப் பயணத்தில் மென்மேலும் முன்னேற்றத்தை காண வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

இந்தியா – பிரான்ஸ் இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சி மேகாலயாவின் **Umroi-**ல் இன்று தொடங்கியது.

வரும் 26ஆம் தேதிவரை நடைபெறும் இப்பயிற்சியில், இந்தியா, பிரான்ஸ் நாடுகளைச் சேர்ந்த தலா 90 வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் இப்பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

>>>><<<<

ஈரான் நாட்டில் உள்ள **Chabahar** துறைமுகத்தை இந்தியா பயன்படுத்தும் வகையில், இருநாடுகளுக்கு இடையேயான நீண்ட கால ஒப்பந்தம் இன்று கையெழுத்தானது.

இதுதொடர்பான நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய மத்திய துறைமுகங்கள், நீர்வழி போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்தா சோனோவால், இந்த ஒப்பந்தமானது **Chabahar**–ல் இந்தியாவின் நீண்டகால செயல்பாட்டிற்கு அடித்தளமிட்டுள்ளதாக தெரிவித்தார்.

கடல்சார் போக்குவரத்திற்கு ஏற்ற சிறப்பான துறைமுகமாக இது அமைந்துள்ளது என்று திரு. சர்பானந்தா சோனோவால் கூறினார்.

வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் வெளியிட்டுள்ள சமூகவலைதளப்பதிவில், மத்திய ஆசியா, ஐரோப்பிய-ஆசிய நாடுகள் மற்றும் ஆப்கானிஸ்தானுடனான இந்தியாவின் பிணைப்பை இந்த ஒப்பந்தம் மேலும் வலுப்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

மஹாராஷ்டிர மாநிலம், கட்ச்ரோலி மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினருக்கும், நக்ஸலைட்டுகளுக்கும் இடையே இன்று நடந்த மோதலில் இரண்டு பெண்கள் உட்பட 3 நக்ஸலைட்டுகள் கொல்லப்பட்டனர்.

அப்பகுதியில் நக்ஸலைட்டுகள் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த உளவுத் தகவல்கள் அடிப்படையில், சிறப்பு அதிரடிப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டதாகவும், அப்போது அவர்கள் மீது நக்ஸலைட்டுகள் தாக்குதல் நடத்தியதாகவும் காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் போது ஏ.கே. 47 துப்பாக்கி உட்பட பல்வேறு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

தற்போது, கட்ச்ரோலி மாவட்டத்தில் நக்ஸலைட் எதிர்ப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

**>>>><<<<**

யுக்ரைன் நாட்டின் வடகிழக்கு எல்லையில் உள்ள **Vovchainsk** நகரை கைப்பற்றியதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை யுக்ரைனின் ராணுவ செயல்பாடுகளை முடக்கும் என்றும் அந்நாடு கூறியுள்ளது.

இதுதொடர்பாக, யுக்ரைன் அதிபர் திரு. விளாடிமிர் ஜெலன்ஸ்கி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், யுக்ரைன் வீரர்கள் ரஷ்யாவிற்கு எதிராக தொடர்ந்து தீவிரமாக சண்டையிட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

**>>>><<<<**

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற தேர்தல் பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் தமிழக தலைமைத் தேர்தல் அதிகார் திரு. சத்யபிரத சாஹூ கலந்து கொண்டார்.

வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடவிருக்கும் தேர்தல் அதிகாரிகளுக்கு அவர் ஆலோசனைகளை வழங்கினார்.

முன்னதாக, தூத்துக்குடி வ.உ.சி. பொறியியல் கல்லூரியில் வாக்கு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள அறைகளை திரு. சத்யபிரத சாஹூ ஆய்வு செய்தார்.

**>>>><<<<**

யானை வழித்தட வரைவு அறிவிக்கையை தமிழக அரசு திரும்பப்பெற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

திருச்சியில் நடைபெற்ற அக்கட்சியின் மாநில நிர்வாகக்குழு மற்றும் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடந்த 21-ஆம் தேதி வெளியிடப்பட்ட வரைவு அறிவிக்கை, ஆங்கிலத்தில் மட்டுமே உள்ளதாகவும், தமிழில் மொழியாக்கம் கூட செய்யப்படவில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**>>>><<<<**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், குஜராத் - கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

அஹமதாபாதில் நடைபெறவுள்ள இப்போட்டி, மோசமான வானிலை காரணமாக ஆட்டம் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

**>>>><<<<**

ஆசிய **Trampoline** ஜிம்னாஸ்டிக் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Srushti Khandagale** வெள்ளிப்பதக்கம் வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

ஹாங்காங்கில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**>>>>END<<<<**